# 31ம் நாள்
# ஞாபகார்த்த மலர்



யாழ் கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும்
இல-905 கட்சன் வீதி வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## பொன்னுத்துரை இலட்சுமிதேவி

26.12.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் இல 905 கட்சன் வீதி வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர்
# பொன்னுத்துரை இலட்சுமிதேவி

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# “நினைவு மலர்”

## 26.12.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வருவோர் யாவரையும் வாயார வரவேற்று
உள்ளங்கள் உவக்கும் உபசரிப்புக்களால்
அனைவரும் திக்குமுக்காட வைத்து
இனிமை நிறைந்த கதைகளால் எல்லோரது
இதயங்களிலும் இடம்பிடித்து
இவ்வுலகில் ராணி போலவே வாழ்ந்து
இறைவன் பாதங்களை சென்றடைந்த
எங்கள் இனிய அன்னைக்கு

– குடும்பத்தினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மண்ணில்
1942 . 05 . 29



விண்ணில்
2018 . 11 . 26

அமரர்

# பொன்னுத்துரை இலட்சுமிதேவி

## திதிவெண்பா

ஆண்டு விளம்பி கார்த்திகை பத்தாம் நாள்
கிருட்ணபட்ச சங்கடஹர சதுர்த்தி திதியில்
சிவனடி இலட்சுமிதேவி புகழ் அம்மையார்
தம்பிரான் அடி சேர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

நத்தார் படை ஞானன்பசு வேறிந்தனைக்
- கவிழ்வாய்
மத்தம் மதயானை யுரி போத்த மண வாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலவியின்
- கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக்கேதீச்சரத்தானே

## திருவாசகம்

சிந்தனை நின்றனக் காக்கிநா யினேன்றன்
கண்ணினை நின் திருப் பாதப்போ துக்காக்கி
வந்தனையும் அம்மலர்க் கேயாக்கி வாங்குன்
மணிவார்த் தைகாக்சி ஐம்புலன் களார
வந்தனை பாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மால முதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டு மிலித்தனி யனற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந்த தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளைமா மலர்க் கண்ணியும் கொன்றையும் - துன்று
பொற்குழல் திருச்சடையும்
திவளமாளிகைசூழ் திருத்தில்லையுட்
திருநடம் பயில்கின்ற
திவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழு கொக்கின்றதே

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கில்
அண்டத் தொடு முடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணம்

தண்ணளிவெண் குடை வேந்தன் செயல்கண்டு
- தரியாது
மண்ணவர்கண் மழை பொழிந்தார் வாணர் பூ
- மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யாணிவீதி
- மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழ நின்றான் வீதி
- விடங்கப்பெருமான்

திருச்சிற்றம்பலம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை வரலாறு

இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள நற்பூமியாகிய யாழ்நகருக்கு கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கொழும்புத்துறை என்னும் ஊரில் கைலாசபிள்ளை சின்னம்மா தம்பதியினருக்கு ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்திரண்டாம் ஆண்டு வைகாசி மாதம் இருபத்தி ஒன்பதாம் திகதி வந்துதித்தவரே இலட்சுமிதேவி ஆவார்.

இவருக்கு உடன் பிறந்த சகோதரரான கைலாசபிள்ளை நடராசா ஆவார். இவர் தனது சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்து உறவினர்களுடன் கொழும்புத்துறை, பூநகரி, அறுகுவெளி, சாவகச்சேரி போன்ற இடங்களில் வாழ்ந்து வந்து ஆரம்பக்கல்வியை பூநகரி ஞானி மடம் பாடசாலையிலும் தனங்கிளப்பு ஆரம்ப வித்தியாலயத்திலும், கொழுப்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும், சங்கத்தானை இந்துக் கல்லூரியிலும் கற்று வந்தார். உறவினர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைப்பிலும் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். இவர் திருமணப்பராயத்தை அடைந்தவுடன் உறவினர் சம்மதத்துடன் அவ்வூரில் வசித்த தம்பு மரகதம் தம்பதிகளின் நான்காவது மகனாகிய பொன்னுத்துரையை 1963ம் ஆண்டு கரம்பிடித்தார். கணவன் கொழும்பிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையில் வேலை செய்ததன் காரணமாக கொழும்பு வத்தளைப் பகுதியில் வசித்து வந்து முதலாவது மகளாகிய சுமதியை பெற்றெடுத்தார். இரண்டாவது மகளாகிய சுகந்தியையும் பெற்றெடுத்தார். பின்பு வட்டக்கச்சி படித்த வாலிபர் திட்டத்தில் வழங்கப்பட்ட காணியில் குடியேறினார். வயல்நிலம் கொளிக்கும் வட்டக்கச்சி கிராமத்தில் சுடர்மதி, சுகந்தன் ஆகிய பிள்ளைகளை பெற்றெடுத்து நான்கு பிள்ளைகளுடன் கணவன் தூர இடங்களில் வேலை செய்தாலும் தனது அயராத முயற்சியால் குடும்பத்தினை சீரும் சிறப்புடனும் நடாத்தி வந்தார். பிள்ளைகள் நால்வரும் கல்வியில் சீரும் சிறப்புடனும் விளங்கி வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலே முதலாவது மகளாகிய சுமதி ஆசிரியர் தொழில் கிடைத்து இருந்தும் திருமணத்தின் மூலம் வெளிநாடு சென்று அங்கு சமூர்த்தியை கரம்பிடித்தார். இரண்டாவது மகளாகிய சுகந்தியும் அவ்வாறே வெளிநாடு சென்று இரவீந்தரைக் கரம்பிடித்தார். மூன்றாவது மகளான சுடர்மதி ஆசிரியத்தொழில் செய்து வருகின்ற காலத்தில் திருமணவயது வந்தவுடன் சண்முகநாதனை கரம்பிடித்து திருமணம் செய்து வைத்தார். இக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தனது கணவரையும் தனது ஒரே ஒரு சகோதரனான நடராசாவையும் இழந்து நலன்புரி நிலையங்களில் வசித்து மீண்டும் வட்டக் கச்சியிலே வசித்து வந்தார். ஆசிரிய தொழில் செய்து வந்த தனது ஒரே ஒரு மகனான சுகந்தனுக்கு தமிழ்ச் செல்வியை திருமணம் முடித்து வைத்தார். அதன் பின்னர் கனடா சென்று சிறிது காலம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவி மீண்டும் வட்டக்கச்சிக்கு வந்தார். இவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளாக, நிரோஜன், ஜனனி, பவதாரணி, கோபிகா, சுபகா, விபிஷா, கம்சிகன், அபிர்சன் ஆகியோரையும் கண்டு மனம் மகிழ்வடைந்தார். வட்டக்கச்சி கட்சன் வீதியில் அமைந்திருக்கும் நாகதம்பிரான் ஆலயத்தில் தினமும் சென்று வழிபட்டு இறைவனுடன் ஒன்றிப்பிணைந்து வாழ்ந்து வந்த காலப்பகுதியில் பிள்ளையார் கதை படித்து வீடு வந்து உறங்கிய வேளை காலன் அவரைப் பறித்துக் கொண்டார். இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தாறாம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்
## ஞாயிற்றுக்கிழமை
### 1. தேவாரம்
திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
- குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்
- பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங்
- காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
- மாநிலத்தே

### 2. திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலை புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வவமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப்
பிடித்தேன் எங்களுந்தருளுவதினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்த தோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்!
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## 4. திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. திருப்புராணம்

உலகெலாமுணர்ந்த தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## ௬. திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீ அருளல்வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே

### திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கட்கிழமை

## 1. தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
- தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளங்கவர்
- கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந் தேத்
- அருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மான்
- இவனன்றே.

## 2. திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## 4. திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன்
- சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றது
- ஆர்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை
- மனவாளனுக்கு ஆட் பாரும்
விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அறுபுதக் கோலநீடி யருமறைச் சிரத்தின்
- மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துள்
- நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி
- போற்றி.

## ௬. திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தவென் றென்றுற் றுனை நாளும்
கண்டு கொண்டேன் புற்றிடுவேனே
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவை பாலா
செந்திலங் கண்டிக்கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே

### திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க்கிழமை

## 1. தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

சிறையாரு மடக்கிளியே இங்கே வா தேனொடு
- பால்
முறையாலே உணத்தருவன் மொய்ப்பவளத்
- தொடு தரளந்
துறையாருங்கடல் தோணி புரத்தீசன் துளங்கும்
- இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற்
- பேசாயே.

## 2. திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்
- டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல் பானாம்
- சாழேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

உருக்கி என் உள்ளத்துள்ளே ஊறலந்தோறல்
- மாறாந்
திருக்குறிப்பு அருளும் தில்லைச்செல்வன்
- பாற்செல்லும் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய கள்ளரை அவியாப்
- பவைப்
பெருக்கரைக் காணாக் கண் வாய் பேசாது
- அப்பேய்களோடே.

## 4. திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
- விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட்
- செய்மின் குழாம் பகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில் லதோர்
- ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும்உள்ள பொருள்என்றே
- பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. திருப்புராணம்

வேதநெறி தழைத் தோங்க மிகுசைவத் துறை
- விளங்கப்
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலீர் திருஞான சம்பந்தன்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு
- பரவுவாம்.

## 6. திருப்புகழ்

உம்பர் தருத் தேனு மணிக் கசிவாகி
ஒண் கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன் பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் காக வனத் தணைவோனே
தந்தை வலத் தால ருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானை முகப் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன்கிழமை

## 1. தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான்
- மகளோம்பாடிப் போதொடு
நீர் சுமந்தேத்திப் புகுவார் ரவர் பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன
- கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன
- கண்டேன்.

## 2. திருவாசகம்

நானேயா தவஞ் செய்தேன் சிவாய நம
- எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும்
- சிவபெருமான்
தானே வந்தென துள்ளம் புகுந்தடியேற்கருள்
- செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
- வெறுத்திடவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறாயிரம் கூறிட்டு
அத்தத்தில் அங்கு ஒரு கூறு உன் கண் வைத்தவருக்கு
அமர் உலகு அளிக்கு நின பெருமை
பித்தனென் றொருகால் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்து அருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்ட சோளேச் சரத்தானே.

## 4. திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே.

## 5. திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௬. திருப்புகழ்

திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலுவாலே
ஒருத்தரை மதிப்பதில்லை உன்தன் அருளாலே
பொருப்பரை மிகப் பொருது வென்று மயில்
- மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்ற பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

# வியாழக்கிழமை

## 1. தேவாரம்

திருச்சிற்றம்பலம்

காதல் ஆகிக் கசிந்து கண் நீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

## 2. திருவாசகம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரி குழற் பணை முலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைமலர்க் குருந்தமேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

## 3. திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரிய நீசிறிய
என்னையாள் விரும்பி என் மனம் புகுந்த
எளிமையை என்றுநான் மறக்கேன்
முன்னமால் அறியா வொருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே.

## 4. திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை
- ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும்
- இந்திரரும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்
- ததும் நிறைந்தும்
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு
- கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
- வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
- உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
- மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ்
- இருக்க என்றார்

## 6. திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற்குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக்கிழமை

## 1. தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்
- கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை
- யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை
- நினைக்கேனே

## 2. திருவாசகம்

முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்
- வேனைப்
பத்தி நெறியறிவித்துப் பழவினைகள் பாறும்
- வண்ணம்
சித்த மலம் அறிவித்துச் சிவமாக்கியெனை
- ஆண்ட
அத்தனெனக் கருளியவாறார் பெறுவார்
- அச்சோவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்று முதல் இன்று
- வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச்
- சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய
- சுந்தரரே.

## 4. திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
- யெங்குங் குழாம் பெருகி
விழலொலி விண்ணளவுஞ் சென்று விம்மி மிகு
- திருவாரூரின்
மழவிடையார்க்கு வழிவழி யாளாய்
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
- பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப் பெருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே யாக
இந்து வாழ் சடையானாடு மானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## ௬. திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள் சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்
- பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிக்கிழமை

### 1. தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
- வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

### 2. திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுட் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

கடியார் கணம் புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமர்உலகம் ஆள நீஆளாதே
முடியா முத்தீ வேள்வி மூவாயிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டு நீ குலாவிக்
- கூத்தாடினையே

## 4. திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## 5. திருப்புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுராடியாரவர் வான் புகழ்
நின்ற தெங்கு நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# சிவபுராணம்

## காப்பு

*தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி*
*அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை*
*மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்*
*திருவா சகமென்னுந் தேன்.*

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான்
- தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரா பெருந்துறைநந் தேவனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
- விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்தபிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்
- தன்னை

மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலங்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லாயுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார்
- தங்கருத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத
- நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண்டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே. 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன்னருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கோலோ
வுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே 03

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைத்தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நாற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மனமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய்
சகல கலாவல்லியே. 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே. 07

சொல்லிற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள்ள
வாய்நளி னாசனஞ்சேர்
சொல்லிற் கரிதென்றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்கல்விப்
பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 08


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலத் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவலலியே. 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. 10

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *கௌரி காப்பு*

## *விநாயகர் துதி*

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே
\- வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப்
\- போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத்திகைப்போர்க்கு நெறிமுறையைக்
- காட்டிடுவாய்

காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக்காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில்
- மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது
- இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம்
- ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம்
- ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே
- இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே
- கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு
- கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில்
- விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக்
- காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச்
- செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல்
- கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீரபெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப்
- போற்றிடுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



*நேரிசை வெண்பா*

*துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்*
*- நெஞ்சிற்*
*பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்*
*- கதித்(து) ஓங்கும்*
*நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்*
*சஷ்டி கவசந் தனை.*

**காப்பு**

*அமரர் இடர்தீர அமரம் புரிந்த*
*குமரன்அடி நெஞ்சே குறி*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவக ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளு மிளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டி லங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பிற்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத் தினம்பதித்த நற்சீ ரரையும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மாகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம்வலா ஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அரையிருள் தன்னில் அனயவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
கனபூசை சொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பனகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கப் பிளவை படர் தொடைவாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருக
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறைக் கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழிநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி குனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயிர்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை

## சிறப்புப்பாயிரம்

செந்தமிழ்முனிவன் செப்பியகாதையும்
கந்தபுராணக் கதையிலுள்ள துவு
மிலிங்கபுராணத் திருந்தநற்கதையு
முபதேசகாண்டத் துரைத்தநற்கதையுந்
தேர்தெடுத்தொன்றாய்த் திரட்டியைங்காற்கு
வாய்ந்தநல்விரத மான்மியமுரைத்தான்
கன்னியங்கமுகிற் கயலினங்குதிக்குந்
துன்னியவளவயற் சுன்னாகத்தோ
னரங்கநாத னளித்தருள் புதல்வன்
திரம்பெறுமுருகனைத் தினந்தொறும்
வரம்பெறவணங்கும் வாதபண்டிதனே.

### காப்பு

கரும்பு மிளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவு மேன்மே - லருந்திக்
குணமுடைய ராயிருந்து குற்றங்க ளீர்க்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமான்றா னீன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத்தொழுவே
னென்கதைக்கு நீயென்றுங் காப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கு பீடும் பெருக்கு - மொருவாக்கு
மாதலால் வானோர்க ளானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை

ஒற்றை மருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தி
- லெப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று

பாலுந் தெளிதேனும் பாகும பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன்
- கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

## சப்பாணி

எள்ளுப்பொரிதேனவலப்ப மிக்கும்பயறுமிளநீரும்
வள்ளிக்கிழங்குமாம்பழமும் வாழைப்பழமும்
- பலாப்பழமும்
வெள்ளைப்பாலுமோதகமும் விரும்பிப்படைதேன்
- சந்நிதியிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளைக்கருணைக் கணபதியே கொட்டியருள்
- சப்பாணி

சண்டப்பெருச்சாளியேறிச் சடைகொண்டுவையத்
- துலாவி
யண்டத்தமரர் துதிக்க வடியார்க்கருளும்பிரானே
எண்டிக்குமன்பர்கள் பார்க்க வினையற்ற
- பேரொளிலீசக்
குண்டைக்கணபதிநம்பி கொடுங்கையாற் சப்பாணி
- கொட்டே

**சரஸ்வதி துதி**

புத்தகத்துள்ளுறைமாதே பூவிலமர்ந்திடுவாழ்வே
வித்தகப் பெண் பிளாய்நங்காய் வேதப்பொருளுக்
- கிறைவி
முத்தின் குடையுடையாளே மூவுலகுந் தொழு
- தேத்துஞ்
செப்புக்கலித்துமுலையாளே செவ்வரியோடிய
- கண்ணாய்
தக்கோலத்தினும் வாயாய் சரஸ்வதியென்னுந்
- திருவே
எக்காலமுமுன்னைத்தொழுவே னியலிசைநாடக
- மென்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ்க்கல்விகளெல்லா முழுதுமெனக்கருள்
- செய்தென்
சித்தந்தனிலிருந்து திருவருள்செய்திடுவாயே

## அதிகாரம்

பொன்னறிங்கடுக்கும் புனற்செறிகுடுமித்
தென்மலையிருந்த சீர்சால்முனிவன்
கந்தமும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ்வகையாற் றெளிவுறச்செப்பின
னன்னதிற்பிறவி லரிறபத்திரட்டித்
தொன்னெறிவிளங்கச் சொல்லுவன்கதையே

## கதை

மந்தரகிரியில் வடபாலாங்கோ
ரிந்துதவழ்சோலை யிராசமாநகரியி
லந்தணனொருவனு மாயிழையொருத்தியுஞ்
சுந்தரப்புதல்வரைப் பெறுதல்வேண்டிக்
கடவுளாலயமுங் கடிமலர்ப்பொய்கையுந்
தடநிழற்பள்ளியுந் தாம்பலசமைத்துப்
புதல்வரைத்தருகெனப் பொருப்பரசீனற்
மதர்விழிபாகனை வழிபடுநாளின்
மற்றவர்புரியு மாதவங்கண்டு
சிற்றிடையுமையாள் சிவனடிவணங்கிப்
பரனேசிவனே பல்லுயிர்க்குயிரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனே மறையவர்க் கருள்புரிந்தருளென
அந்த வந்தணனுக் கிந்தநற்பிறப்பின்
மைந்தரில்லையென்று மறுத்தரனுரைப்ப
எப்பரிசாயினு மெம்பொருட்டொருசுதன்
றப்பிலாமறையோன் றனக்கருள்செய்கென
வெமையாளுடைய வுமையாண்மொழிய
விமையாமுக்க ணிறைவன்வெகுண்டு
பெண்சொற்கேட்டல் பேதமையென்று
பண்சொற்பயிலும் பாவையைநோக்கிப்
பேதாய்நீபோய்ப் பிறவெனமொழிய
மாதுமையவளு மனந்தளர்வுற்றுப்
பொன்றிடுமானுடைப் புன்பிறப்பெய்துதல்
நன்றலவென்றே நடுக்கமுற்றுரைப்பக்
கறைமிடற்றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதலவற்குநீ பிள்ளையாகச்
சென்றவண்வளர்ந்து சிலபகற்கழிந்தால்
மன்றல்செய்தருள்வோம் வருந்தலையென்று
விடைகொடுத்தருள விலங்கன் மாமகளும்
பெடைமயிற்சாயற் பெண்மகவாகித்
தார்மலிமார்பன் சதுர்மறைக்கிழவன்
சீர்மலிமனைவி திருவயிற்றுதித்துப்
பாவையுஞ்சிற்றிலும் பந்தொடுகழங்கும்
யாவையும்பயின்ற வியல்பினளாகி
ஐயாண்டடைந்தபி னன்னையுமத்தனு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையார்கருங்குழல் வாணுதறன்னை
மானுடமறையோற்கு வதுவைசெய்திடக்
கானமர்குழலியைக் கருதிக்கேட்பப்
யிறப்பிறப்பில்லாப் பெரியோர்க்கன்றி
யறத்தகுவதுவைக் கமையேன்யானென
மற்றவன் றன்னையுன் மணமகனாகப்
பெற்றிடலரிதெனப் பெயர்ந்தவர்பேச
அருந்தவமுயற்சியா லணுகுவேனியானெனக்
கருந்தடநெடுங்கட கவுரியங்குரைப்ப
மசூரமலிகமல மலர்த்தடத்தருகிற்
றருநிழற்றருந்தவச் சாலையதமைத்துப்
பணியணிபற்பல பாங்கியர்சூழ
அணிமலர்க்குழலுமை யருந்தவம்புரிதலு
மரிவை தனருந்தவ மறிவோம்யாமென
விருவருமறியா விமையவர்பெருமான்
மானிடமேந்தும் வண்ணமதொழித்து
மானுடயோக மறையவனாகிக்
குடையொடுதண்டுநற் குண்டிகைகொண்டு
மடமயிறவம்புரி வாவிக்கரையிற்
கண்ணுதல்தந்து கருணைகாட்டித்
தண்ண றுங்கூந்தற் றையலைநோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லியலாய்நீ
யென்பெறத் தவமிங் கியற்றுவதென்றலுங்
கொன்றைவார்சடையனைக் கூடவென்றுரைத்தலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றெனச்சிரித்து நான்மறையோனு
மாட்டினிலேறி மான்மழுத்தரித்துக்
காட்டினிற்சுடலையிற் கணத்துடனாடிப்
பாம்புமெலும்பும் ப.்.றலைமாலையுஞ்
சாம்பருமணிந்து தலையோடேந்திப்
பிச்சைகொண்டுழலும் பித்தன்றன்னை
நச்சிநீர்செய்தவ நகைதருநுமக்கெனப்
பூங்கொடியருந்தவம் பூசுரன்குலைத்தலு
மாங்கவணாணமுற் றணிமனைபுகுதச்
சேடியவர்வந்து செழுமலர்க்குழலியை
வாடுதலொழிகென மனமிகத்தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர்சிலர்போய்த்
தந்தைதாயிருவர் தாளிணைவணங்கி
வாவிக்கரையில் வந்தொருமறையோன்
பாவைதன்செங்கையைப் பற்றினனென்றலுந்
தோடலர்கமலத் தொடைமறைமுனியை
யாடகமாடத் தணிமனைக்கொணர்கென
மாடகயாழ்முரல் மங்கையரோடி
நீடியபுகழாய் நீயெழுந்தருளென
மைம்மலர்க்குழலி வந்தெனையழைக்கி
லம்மனைபுகுவனென் றந்தண்ணுரைத்தலும்
பொற்றொடிநீபோய்ப் பொய்கையினின்ற
நற்றவமுனியை நடாத்திக்கொணர்கெனச்
சிவனையிழந்த சிற்றறிவுடையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னவனையான் சென்றிங் கழைத்திடேனென்று
சிற்றிடைமடந்தையுஞ் சீறினளாகி
மற்றையமாதர் மதிமுகநோக்கி
நெற்றியிற்கண்ணுடை நிமனுக்கல்லதென்
பொற்பமர்கொங்கை பொருந்துதற்கரிதால்
மானுடவேட மறையவன்றனக்கு
யான்வெளிப்படுவ தில்லையென் றிசைப்ப
மனயிைடைவந்த மாமுனிதன்னை
யிணையடிதொழுத லிளையோர்க்கியல்பெனத்
தந்தையுந்தாயுந் தகைபெறமொழியச்
சிந்தைகுளிர்ந்து சீறுதலொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென்றஞ்சி
யாயிழைதானு மவனெதிர்சென்று
சுற்றிவந்தவனடி சுந்தரிவணங்கி
மற்றவன்றன்னை மனையிற்கொணர்ந்து
ஆதியபம்கவற் கன்பனாகும்
வேதியன்பழைய விருத்தனென்றெண்ணி
யாசனநல்கி யருக்கிணமுதலாப்
பாதபூசனைகள் பண்ணியபின்னர்ப்
போன கம்படைத்துப் பொரிக்கறிபருப்புநெய்
யான்பால்மாங்கனி யழகியபலாச்சுளை
தேன்கதலிப்பழஞ் சீர்பெறப்படைத்து
அந்தணன்றன்னை யமுதுசெய்வித்துச்
சந்தனங்குங்குமச் சாந்திவைகொடுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கோலத்தொடு சாதிக்காயும்
கர்ப்பூரத்தொடு கவின் பெறக்கொண்டு
வெள்ளிலையடைக்காய் விளங்கியபொன்னி
னொள்ளியதட்டி லுகந்து முன்வைத்துச்
சிவனெனப்பாவனை செய்துநினைந்து
தவமுறைமுனிவனைத் தாளிணை வணங்கத்
தேனமர்குழலி திருமுகநோக்கி
மோனமாமுனிபுன் முறுவல்காட்டிக்
கற்றைச்சடையுங் கரமொருநான்கு
நெற்றியினயனமு நீலகண்டமு
மானுமழுவு மலர்க்கரத் திலங்கக்
கூன்மதிநிலவுங் கொழித்திடமுடிமேல்
வரந்தருமுதல்வன் மடமயில்காணக்
கரந்தன்னுருவங் காட்டிமுன்னிற்ப
மரகதமேனி மலைமகடானும்
விரைவொடங்கவனடி வீழ்ந்திறைஞ்சினளே
யரியயனிந்திர னமார்விஞ்சையர்
கருடர்கின்னரர் காயவாசியர்
ஏதமில்முனிவ ரவுணரிராக்கதர்
பூதரியக்கர்கிம் புருடரலகை
சித்தர்தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும்பதினெண் கணத்திலுள்ளவரு
மணிக்கருங்களத்தனை வந்தடைந்ததற்பின்
மன்றலங்குழலிக்கு வதுவைநாட்குறித்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றல்வந்திலங்கு முன்றிலகத்துப்
பொன்றகழ்பவளப் பொற்கானாட்டி
மாணிக்கத்தால் வளைபாலபரப்பி
யாணிப்பொற்றகட்டா லழகுறவேய்ந்து
நித்திலமாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகடோறும் பலபணிபதித்துத்
தோரணநாட்டித் துகில்விதானித்துப்
பூரணப்பொற்குடம் பொலிவுறவைத்துத்
திக்குத்தோறுந் திருவிளக்கேற்றிப்
புக்திப்படர்முளைப் பாலிகைபரப்பிக்
கன்னலுங்கமுகுங் கதலியுநாட்டிப்
பன்மலர்நாற்றப் பந்தர்சோடித்து
நலமிகுகைவலோர் நஞ்சணிமிடற்றனைக்
குலவியதிருமணக் கோலம்புலைந்தார்
வருசுரர்மகளிர் மலைமகடன்னைத்
திருமணக்கோலஞ் செய்தனாராங்கே
யெம்பிரானையு மிளங்கொடிதன்னையு
மும்பசெல்லா மொருங்குடன் கூடிக்
கடலென விளங்குங் காவணந்தன்னிற்
சுடர்விடுபவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந்தேத்த மகிழ்ந்துடனிருத்திப்
பறையொலியோடு பனிவளையார்ப்ப
வதுவைக்கேற்ற மறைவிதிநெறியே
சதுர்முகனோமச் சடங்குகளியற்றத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழலென விளங்குந் தாலிபூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப்பிடித்தபி
னரிவலஞ்சூழ வெரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில்வைகிப்
போதணிகருங்குழல் பூவைதன்னுடனே
யோதநீர்வேலைசூ ழுஞ்சையம்பதிபுக
ஏரர்வழியி னெண்டிசைதன்னைப்
பாராதேவா பனிமொழிநீயென
வருங்கருங்குழலாண் மற்றுமுண்டோவெனத்
திருந்திழைமடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும்பிடியுங் கலந்துவிளையாடல்கண்
டொளிர் மணிப்பூணு ளூரவோனுடனே
யிவ்வகையாய்விளை யாடுவோமீங்கென
வவ்வகையரனு மதற்குடன்பட்டு
மதகரியுரித்தோன் மதகரியாக
மதர்விழியுமைபிடி வடிவமதாகிக்
கூடியகலவியில் குவலயம்விளங்க
நீடியவானோ நெறியுடன்வாழ
வந்தணர்சிறக்க வானினம்பெருகச்
செந்தமழிவேள்விவே தாகமஞ்சிறக்க
வறம்பலபெருக மறம்பலசுருங்கத்
திறம்பலவரசர் செகதலம்விளங்க
வெங்கரிமுகமும் வியன்புழைக்கையோ
டைங்கரதலமு மலர்ப்பதமிரண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளத்தொளிசேர் பைந்துவர்வாயுந்
தவளக்கிம்புரித் தடமருப்பிரண்டுங்
கோடிசூரியர்போற் குலவிடுமேனியும்
பேழை போலகன்ற பெருங்குடவயிறும்
நெற்றியினயனமு முப்புரிநூலுங்
கற்றைச்சடையுங் கனகநீண்முடியுந்
தங்கியமுறம்போற் றழைமடிச்செவியுமா
யைங்கரத்தண்ணல்வந் தவதரித்தலும்
பொங்கரவணிந்த புண்ணியமூர்த்தியு
மங்கையுமனமிக மகிழ்ந்துடனோக்கி
விண்ணுளோர்களும் விரிந்தநான்முகனு
மண்ணுளோர்களும் வந்துனை வணங்க
வாங்கவர்தங்கட் கருள்சுரந்தருளித்
தீங்கதுதீர்த்துச் செந்நெறியளித்துப்
பாரணமாகப் பலகனியருந்தி
யேரணியாலின் கீழினிதிருவெனப்
பூதலந்தன்னிற் புதல்வனையிருத்திக்
காதல்கூர்மடநடைக் கன்னியுந்தானு
மைவளர்சோலை மரநகர்புகுந்து
தெய்வநாயகன் சிறந்தினிதிருந்தபின்
வானவராலு மானுடரா லுங்
கானமர்கொடிய கடுவிலங்கா லுங்
கருவிகளாலுங் காலனாலு
மெருவகையாலு முயிரழியாமற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிரம்பேறமாதவஞ் செய்துமுன்னுளில்
வரம்பெறுகின்ற வலிமையினாலே
யைம்முகச்சீயமொத் தடற்படைசூழக்
கைம்முகப்படைத்த கயமுகத்தவுணன்
பொன்னுலகழித்துப் புலவரைவருத்தி
யிந்நிலத்தவரை யிடுக்கண்படுத்திக்
கொடுந்தொழில்புரியுங் கொடுமைகண்டேங்கி
யடுந்தொழிற்குலிசத் தண்ணலுமமரருங்
கறைபடுகண்டக் கடவுளைப்போற்றி
முறையிடக்கேட்டு முப்புரமெரித்தோ
னஞ்சலீரென்றவர்க் கபயங்கொடுத்தே
யஞ்சுகைக்கரிமுகத் தண்ணலை நோக்கி
யானைமாமுகத் தவுணனோடவன்றன்
சேனைகள் முழுவஞ் சிந்திடப்பொருது
குன்றுபோல்வளர்ந்த குறட்படைகூட்டி
வென்றுவாவென்று விடைகொடுத்தருள
வாங்கவன்றன்னோ டமர்பலவுடற்றிப்
பாங்குறுமவன்படை பற்றறக்கொன்றபின்
தேர்மிசையேறிச் சினங்கொடுசெருவிற்
கார்முகம்வளைத்த கயமுகாசுரன்மே
லொற்றைவெண்மருப்பை யொடித்தவனுரத்திற்
குற்றிடவெறிக்கான குருதிசோர்ந்திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணெனவெழுந்து
வாய்ந்தமுடிகமாய் வந்தவன்பொரவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமுடிகத்தை வாகனமாக்கி
யெந்தைவிநாயக னேறினனிப்பா
லெறிந்தவெண்மருப்பந் கிமைநொடியளவிற்
செறிந்ததுமற்றவன் றிருக்கரத்தினிலே
வெல்லவைக்கதிர்வேல் விழிபடைத்தருளும்
வல்லவைதனைத்தன் மனையெனமணந்தே
யோகையோடெழுந்தாங் குயர்படைசூழ
வாகையும்புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங்கோட்டில் கயல்கமுகேறுந்
திருச்செங்காட்டிற் சிவனையர்ச்சித்துக்
கணபதீச்சுரமெனுங் காரணநாமம்
கணபதிபுகழ் தரு பதிக்குண்டாக்கிச்
சங்கரன்பார்ப்பதி தனிமனமகிழ
விங்குவந்தன்புட னெய்தியபின்னர்க்
கணங்களுக்காசராய்க் கதிர்முடிசூட்டி
யிணங்கியபெருமைபெற் றிருந்திடவாங்கே
தேவர்கள் முனிவர்கள் சித்தர்கந்தருவர்
யாவரும்வந்திவ னேவல் செய்திடுநா
ளதிகமாயுரைக்கு மரவணித்திங்களின்
மதிவளர்பக்கம் வந்திடுசதுர்த்தியில்
விநாயகர்க்குரிய விரதமென்றெண்ணி
மனாதிகள்களித்து மரபொடு நோற்றா
ரிப்படிநோற்றிட் டெண்ணியபெருநா
ளொப்பரும்விரதத் துறுமொருசதுர்த்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோற்றுநற்பூசை நுடங்கா தாற்றிப்
போற்றிசெய்திட்டார் புலவரைங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன்குமர னிருத்தம்புரிந்தா
னனைவருங்கைதொழு தடியிணை போற்ற
வனைகழற்சந்திரன் மனச்செருக்கதனாற்
பேழைபோல்வயிறும் பெருத்தகாத்திரமுந்
தாழ்துளைக்கையுந் தழைமுறச்செவியுங்
கண்டனனகைத்தான் கரிமுகக்கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
யென்னைக்கண்டிங் நிகழ்ந்தனைசிரித்தா
யுன்னைக் கண்டவருரைக் குமித்தினத்திற்
பழியொடுபாவமும் பலபலவிதனமு
மழிவுமெய்துவரென் றசனிபோற்சபித்தான்
விண்ணவரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித்தினத்திற்
கோரவெஞ்சின மிகக் கொண்டனனதனால்
மார்கழித்திங்கண் மதிவளர்பக்கஞ்
சதயந்தொட்ட சட்டிநல்விரதமென்
றிதயத்தெண்ணி யாவருநோற்றார்
இப்புவிமாந்த ரியம்பிய விரதம்
வைப்புடநோற்ற வகையினிச் செல்வாம்
குருமுடி புனை குருகுலத்துதித்த
தருமனுமிளைய தம்பியர்நால்வரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகிமைந்தன் றிருமுகநோக்கி
யெண்ணியவிரத மிடையூறின்றிப்
பண்ணியபொழுதே பலிப்புண்டாகவுஞ்
செருவினிலெதிர்ந்த செறுநரை வென்று
மருமலர்ப்புயத்தில் வாகைசூடிடவு
மெந்தத்தெய்வ மெவ்விர தத்தை
வந்தனைசெய்யில் வருநமக்குரை யெனப்
பாட்டளிதுசையும் பசுந்துழாய்மார்பனுங்
கேட்டருள்வீரெனக் கிளத்துதலுற்றா
னக்குநீறணியு மரண்முதலாளித்தோன்
விக்கினந்தீர்க்கும் விநாயகமூர்த்தி
யோடவைத்திடும்பொன் னொத்தொளிவிளங்குங்
கோடிசூரியர்போற் குலவியமேனியன்
கடகரிமுகத்தோன் காத்திரம்பெருத்தோன்
றடைவரைபோலுஞ் சதுர்ப்புயமுடையோன்
சறுவாபரணமுந் தரிக்கப்பட்டவன்
உறுதிமதிக்குழவிபோ லொருமருப்புடையோ
னொருகையிற்றந்தமு மொருகையிற்பாசமு
மொருகையின்மோதக மொருகையிற்செபங்செ
யுத்தமமாலையோ னுறுநினைவின்படி
சித்திசெய்வதனாற் சித்திவிநாயக
னென்றிமையவரு மியாவருந்துதிப்ப
நன்றிதருந்திரு நாமம்படைத்தோன்
புரவலர்காணப் புறப்படும்போதுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருவினில்யுத்தஞ் செய்திடும்போதும்
வித்தியாரம்பம் விரும்பிடும்போது
முத்தியோகங்க ளூஞற்றிடும்போது
மாங்கவன் றன்னை யருச்சனைபுரிந்தாற்
றீங்குறாதெல்லாஞ் செயமுண்டாகும்
கரதலமைநதுடைக் கணபதிக்குரிய
விரதமொன்றுள கதை விரும்பிநோற்றவர்க்குச்
சந்ததிதழைத்திடுஞ் சம்பத்துண்டாம்
புந்தியினினைந்த பொருள்கைகூடு
மேவலர்தமையும் வென்றிடலாமெனத்
தேவகிமைந்தன் செப்பிடக்கேட்டு
நுவலரும்விரத நோற்றிடுமியல்பும்
புகர்முகக்கடவுளைப் பூசைசெய்விதமும்
விரித்தெமக்குரை த்திட வேண்டுமெற்றிரப்ப
வரைக்குடைகவித்தோன் வகுத்துரைசெய்வான்
தேருநீராவணித் திங்களின் மதிவளர்
பூருவபக்கம் புணர்ந்திடுசதுர்த்தியின்
முந்தும்புலரியின் முறைநீர்படிந்து
சந்திவந்தனக் கவறாதாற்றி
யத்தினமதனி லைங்கரக்கடவுளைப்
பத்தியோடர்ச்சனை பண்ணுதல்வேண்டும்
வெள்ளியாற்பொன்னால் விளங்குமங்கவன்ற
னொள்ளியவருட்டிரு வுருவுண்டாக்கிப்
பூசனைபுரியப் புகன்றனர்பெரியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசிலாமண்ணா லமைத்துந்தகுமாற்
பூசைசெய்திடுமிடம் புனிதமாக்கி
வாசமென்மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங்கோசிகங் கொடிவிதானித்து
நீடியநூல்வளை நிறைகுடத்திருத்தி
விந்தைசேர்சித்தி விநாயகனுருவைச்
சிந்தையினினைந்து தியானம்பண்ணி
யாவாகனமுத லர்க்கிப்பாத்தியம்
வாகாராசம னம்வரைகொடுத்தே
யைந்தமிர்தத்தா லிபிடேகித்துக்
கந்தஞ்சாத்திக் கணேசமந்திரத்தா
லீசுரபுத்திர னென்னுமந்திரத்தா
மாசாலிரண்டு வத்திரஞ்சாத்திப்
பொருந்துமைசுதனாப் புகலுமந்திரத்தாற்
றிருந்தும்பளிதத் தீபங்கொடுத்துப்
பச்சறுகுடனிரு பத்தொருவிதமாப்
பத்திரபுட்பம் பலபலகொணர்ந்தே
உமாசுதன்கணாதிப னுயர்கரிமுகத்தோன்
குமாரகுரவன் பாசரங்குசகர
னேகதந்த னீசுரபுத்திர
னாகுவாகன னருடருவிநாயகன்
சர்வகாரிமுந் தந்தருள் புரிவோ
னேரம்பமூர்த்தி யென்னுநாமங்களா
லாரம்பத்துட னர்ச்சனைபண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதகமப்ப முதற்பணிகாரந்
தீதகன்மரங்கனி தீங்கதலிப்பழம்
வருகைகயித்த மாதுளங்கனியொடு
தரித்திடுநெட்டிலைத் தாழைமுப்புடைக்காய்
பருப்புநெய்பொரிக்கறி பாறயிர்போனகம்
விருப்புளசுவைபொருள் மிகவுமுன்வைத்தே
யுருத்திரப்பிரியவென் றுரைக்குமந்திரத்தால்
நிருத்தன்மகற்கு நிவேதனங்கொடுத்து
நற்றவர்புகன்றாநா னான்குபசாரமு
மற்றவன்றிருவுள மகிழ்ந்திடச்செய்தே
யெண்ணுந்தகுதி யிருபிறப்பாளர்க்
குண்ண றுசுவைசே ரோதனநல்கிச்
சந்தனமுத்துத் தானந்தக்கிணை
யந்திணர்க்கீந்திட்டருச்சகன்றனக்குத்
திருத்தகும்விநாயகத் திருவுருவத்தைத்
தரித்தவத்திரத்துடன் றானமாக்கொடுத்து
நைமித்திகமென நவிறருமரபா
லிம்முறைபூசனை யாவர்செய்தாலு
மெண்ணியகருமம் யாவையுமுடிப்பர்
திண்ணியசெருவிற் செயமிகப்பெறுவ
ரானிவன்றன்னைமுன் னர்ச்சனைபண்ணிப்
புரமொருமூன்றும் பொடிபடவெரித்தா
னுருத்திரனிவனை யுபாசனைபண்ணி
விருத்திராசுரனை வென்றுகொன்றிட்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னகலிகையிவன்றா னர்ச்சனைபண்ணிப்
பகர் தருங்கணவனைப் பரிவுடனடைந்தாள்
தண்ணார்மதிமுகத் தாடமயந்தி
யந்நரளிவனை யர்ச்சனைபண்ணி
கண்ணார்பரவு நளனையடைந்தா
ளைங்கரக்கடவுளை யர்ச்சனைபண்ணி
வெங்கதநிருதரை வேர றக்களைந்து
தெசர தன்மைந்தன் சீதையையடைந்தான்
பகிரதனென்றும் பார்த்திவனிவனை
மகிதலந்தன்னின் மலர்கொடச்சித்து
வரநதிதன்னை வையகத்தழைத்தான்
அட்டதேவதைகளு மர்ச்சித்திவனை
யட்டபோகத்துட னமிர்தமும்பெற்றார்
உருக்குமணியெனு மொண்டொடிதன்னைச்
செருக்கொடுவவ்விச் சிசுபாலன்றான்
கொண்டுபோமளவிற் குஞ்சரமுகவனை
வண்டுபாண்மிழற்றா மலர்கொடச்சித்துத்
தாரியின் மறித்தவன் றனைப்புறங்கண்டு
யாமுமங்கவளை யின்புறப்பொற்றோம்
புகர்முகக்கடவுளைப் பூசனைபுரிந்து
மிகமிகமனத்தில் விழைந்தனபெற்றா
ரிப்புவிதன்னி லெண்ணுதற்கரிதா
லப்படிநீவிரு மவனையர்ச்சித்தா
லெப்பொருள்விரும்பினீ ரப்பொருள்பெறுவீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரென்றுகன்றெறிந்தோ னெடுத்திவையுரைப்ப
வன்றுமுற்றருமனு மனுசருமிவனைப்
பூசனைபுரிந்து புலனிலான்மைந்தாரை
நாசனம்பண்ணி நராதிபராகிச்
சிந்தையினிணைந்தவை செகத்தினிற்செயங்கொண்
டந்தமில்செல்வத் தரசியல்பெற்றார்.
ஈங்கி துநிற்க விவ்விரதத்திய
லோங்கிய காதைமற் றொன்றுரை செய்வாங்
கஞ்சநாதன் முகன்றருங் காசிபன்புணர்ந்த
வஞ்சகமனத்தான் மாயை தன்வயிற்றிற்
சூரனென்றொருவனுந் துணைவருந்தோன்றி
யார்கவிசூழ்புவி யனைத்தையுமளித்தே
சீருடைச்சுவர்க்கத் திரவளங்கெடுத்தும்
புரந்தரன்முதலிய புலவரைவருத்தியும்
நிரந்தரந்தீய நெறிநடத்துதலா
லாயிரங்கண்ணனு மமரருமுனிவரு
நீயிரங்கெமக்கென நெடுங்கரங்கூப்பி
யிரசதகிரியுறை யிறைவனைவணங்கி
வரமிகுஞ்சூரன் வலிமைகளுரைக்கச்
சுடர்விடுமணிமுடிச் சூரனைவெல்லக்
கதிர்விடுவடிவேல் கரதலத்தேந்தும்
புதல்வனைத்தருவோம் போமினீரென
வமரர்கோனுக் கரன்விடைகொடுத்துச்
சமரவேல்விழித் தையலுந்தானுங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியகலவியிற் கூடாதூடலு
மோடியவானோ ரொருங்குடன்கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுடனழைத்துச்
சூரன்செய்யுந் துயரமெல்லா
மூர ரவணிந்தோற் குரையெனவுரைப்பக்
காமனையெரித்த கடவுளென்றஞ்சிப்
பாவகன்பயமுறப் பயமுனக்கேதவ
னுற்றிடுங்கர தலத் துன்னையேதரித்தா
னெற்றியினயனமு நீயேயாதலிற்
குற்றமடாது கூறுநீசென்றென
வானவர்மொழிய மற்றவன்றானுந்
தானுச்சபையிற் றரியாதேகி
யெமையாளுடைய வுமையாளுடனே
யமையாவின்பத் தமர்ந்தினிதிருந்த
பள்ளிமண்டபம் பாவகன்குறுகலு
மொள்ளியமடந்தை யொதுங்கிநாணுதலுந்
தெள்ளிதிற்பரமனுந் தேயுவைக்கண்டே
யறுமுகப்பிள்ளையை யவன்கையிலீதலும்
றியவன்பெற்ற வான்பொருள்போலச்
சோதிநீண்முடிச் சுடரோன்கொணர்ந்து
வாதராசன் மலர்க்கையிற்கொடுப்ப
நீதியோடு நின்றுகையேந்திப்
போதநீள்வாயுவும் பொறுக்கவொண்ணாமற்
றரும்புனற்கங்கை தன்கையிற்கொடுப்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும்புனற்கங்கையுந் தாங்கவொண்ணாமற்
பொருந்திரைச்சரவணப் பொய்கையில்வைப்பத்
தண்ணார்வதனத் தாமரையாறுங்
கண்ணாறிரண்டுங் கரமீராறுந்
தூணெனத்திரண்ட தோளீராறு
மாணயிலாதி வான்படையுங்கொண்
டறுமுகக்கடவுளங் கவதரித்திடலு
மறுகியவும்பர் மகிழ்ந்துடன்கூடி
யறுமீன்களைப்பா லளித்திரென்றனுப்ப
வாங்கவர்முலையுண் டறுமுகன்றானு
மோங்கியவளர்ச்சி யுற்றிடுநாளில்
விமலனுமுமையும் விடையுகைத்தாறு
தலைமகனிருந்த சரவணத்தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பாலூட்ட
விருவருமின்பா லெடுத்தெடுத்தணைத்துத்
தேவர்தம்படைக்குச் சேனாபதியெனக்
காவல்கொண்டளிக்கக் கதிர்முடிசூட்டி
யயில்வேண்முதற்பல வாயுதங்கொடுத்துத்
திசையெலாஞ்செல்லுந் தேருமொன்றுதவிப்
பூதப்படைகள் புடைவரப்போய்நீ
யோதுறுமவுணரை யொறுத்திடென்றனுப்ப
விருளைப்பருகு மிரவியைப்போலத்
தகுவரென்றவரைச் சகரிடைமுருக்கிக்
குருகுப்பேர்பெறுங் குன்றமுஞ்சூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமமுந்துளைபட வடிவேல்விடுத்தே
யாவரும்வியப்புற விந்திரன்மகளாந்
தேவகுஞ்சரியைத் திருமணம்புணர்ந்திட்
டமரர்கோனுக் கமருலளித்துக்
குமரவேளுங் குவலயம்விளங்க
வமராவதியி லமர்ந்திருந்தான்
சமரவேலுடைச் சண்முகன் வடிவுகண்
டமரர்மாத ரனைவருமயங்கி
யெண்டருங்கற்பினை யிழந்ததுகண்டே
யண்டரெல்லா மடைவுடன்கூடி
மாதொருபாகனை வந்தடிவணங்கி
மருமலர்க்கடம்பனெம் மாநகர்புகாம
லருள்செயவேண்டுநீ யம்பிகாபதியென
விமையவருரைப்ப விறையவன்றானுங்
குமரனைக்கோபங் கொண்டுமுன்முனியக்
காவல் கொண்டெம் வினை கட்டறுத்தருளுங்
சேவலுங் கொடியோன் றேசம்போகத்
திருந்திழையுமையா ளருந்துயரெய்தி
வருந்திமுன்னிற்க மங்கையைப்பார்த்து
மங்கைநீதான் வருந்துதலொழிகுதி
யங்கைநீதான் வருந்துதலொழிகுதி
யங்கையாற்சூதெறிந் தாடுவோம்வாவென
வென்றதுங்தோற்றதும் விளம்புவார்யாரெனக்
குன்றமென்முலையாள் கூறியசமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றரவணித்த புனிதனைக்காணவங்
குற்றனன்றிருமா லூழ்வினைவலியாற்
சக்கிதபாணியைச் சான்றெனக்குறித்து
மிக்கதோர்சூது விருப்புடனுடச்
சாயகநேருந் தடநெடுங்கருங்க
ணாயகிவெல்ல நாயகன்றோற்ப
வின்பவாயிதழுமை யான்வென்றேனென
வெம்பெருமானும் யான்வென்றேனென
வொருவர்க்கொருவ ருத்தரம்பேசி
யிருவருஞ்சாட்சி யிவனைக்கேட்ப
மர்மனைவதைத்த மான்முகநோக்கிக்
காமனையெரித்தோன் கட்கடைகாட்ட
வென்றநாயகி தோற்றாளென்றுந்
தோற்றநாயகன் வென்றானென்று
மொன்றியபொய்க்கரி யுடனங்குரைப்பக்
கன்றியமனத்தொடு கவுரியங்குருத்து
நோக்கிநீயிருந்து நுவன்றிலையுண்மை
வாக்கினிலொன்றாய் மனத்தினிலொன்றாப்
மைக்கரியுரித்தோன் வதன்நோக்கிப்
பெய்க்கரியுரைத்த புன்மையினாலே
கனலெனவயிற்றிற் கடும்பசிகனற்ற
நிலமிசைக்குருட்டு நெட்டுடற்பாம்பாய்க்
கடகரிமுகத்துக் கடவுள் வீற்றிருக்கும்
வடதருநீழிலிற் கிடவெனச்சபித்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முளரிகள் பூத்த முகினிறத்திருப்போய்த்
துளவணிமருகனுந் துணைவிழியிழந்தே
யாண்டரைக்கணத்தி லாயிரம்யோசனை
நீண்டபைப்பாந்த ணெட்டுடலெடுத்து
வளர்மருப்பொன் றுடை வள்ளல்வீற்றிருக்குங்
கிளர்ச்சியாலின் கீழ்க்கிடந்ததனால்
திரிகடகிரியின் றிருமுகக்கடவுளும்
வழிபடுமடியார் வல்வினைதீர்த்தே
யெழில்பெறுவடமரத் தின்கீழிருந்தான்
கம்பமாமுகத்துக் கடவுடன் பெருமையை
யம்புவியோருக் கறிவிப்போமென
வும்பருலகத் தோரெழுகன்னியர்
தம்பநூலேணியிற் றாரணிவந்து
கரிமுகக்கடவுளைக் கைதொதேத்திக்
கார்த்திகைக்கார்த்திகை கழித்தபின்னாளி
லார்த்தகலிங்கத் தணியிழைவாங்கி
யிருபத்தோரிழை யின்புறக்காட்டி
யொருபோதுண்டி யுண்டொருமனமாய்
வேதத்தாதியும் பூமியிலெழுத்து
மாதிவிநாயகற் கானவெழுத்து
மூன்றெழுத்ததனான் மொழிந்தமந்திரமுந்
தேன்றருங்குழலியர் சிந்தையுட்செபித்தே
யுரைதருபதினா றுபசாரத்தால்
வரைகண் மதலையை வழிபாடாற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருபதுநாளு மிப்படிநோற்று
மற்றைநாளைங்கர மாமுகன்பிறந்த
தற்றைநாட்சதயமு மாறாம்பக்கமுஞ்
சேருமத்தினத்திற் றெளிபுனலாடி
வாரணமுகத்தோன் வதிபெருங்கோயில்
சீர்பெறமெழுகித் திருவிளக்கேற்றிக்
குலவுபொற்கலைகள் கொடுவிதானித்து
மலர்பலதொடுத்திடு மாலைகணாற்றிக்
கொலைபுரிவடிவேற் குகற்குமுன்வருகை
மலைமுகக்கடவுளை மஞ்சனமாட்டிப்
பொற்கலைன்னூற் பூந்துகில்சாத்திச்
சொற்பெறுசந்தனச் சுகந்தர்பூசிச்
செருந்திசண்பகஞ் செங்கழுநீரொடு
குருந்துமல்லிகை கோங்கொடுபிச்சி
கருமுகைபுன்னை கடிகமழ்பாதிரி
மருவிரிஞாழன் மகிழருவாட்சி
தாமரைமுல்லை தழையவிழ்கொன்றை
பூமலர்நொச்சி பூத்தமைக்குவளை
காந்தளத்தி கடம்புசெல்வந்தி
வாய்ந்தநல்லெருக்கு மலர்க்கரவீரம்
பச்சிலைநொச்சி படர்கொடியறுகு
முத்தலைக்கூவிள முதலியசாத்தித்
தூபதீபங்கள் சுகம்பெறக்கொடுத்தே
யப்பமோதக மலலெள்ளுண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பழந்தேங்காய் முதிர்மொழிக்கரும்பு
சீனிதேன்சர்க்கரை செவ்விளநீருடன்
பானறுநெய்தயிர் பருப்புடன்போனகங்
கற்பகக்கடவுள் களித்திடத்திருமுன்
பொற்புறப்படைத்துப் பூசனைபண்ணி
நோற்பதுகண்டு நோலாதிருந்த
பாப்புருவாகிய பஞ்சாயுதனும்
யாப்புறுகொங்கையீர் யானுநோற்பேனென
வாங்கவன்றனக்கும் வேண்டுவதளித்துப்
பாங்கொடிவ்விர தம் பரிந்துநோற்பித்தா
ரண்டர்நாயகனா மைங்கரனருளால்
விண்டுவும்பண்டுள வேடம்பெற்றே
யுஞ்சைமாநகர்புகுந் துமையொடுவிமலன்
கஞ்சநாண்மலர்ப்பதங் கைதொழுதிடலும்
பஞ்சிமென்சீறடிப் பார்ப்பதிநெஞ்சின்
வெஞ்சினமிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ்சாப நீங்கியதேதென
மானெடுங்கண்ணி மணிக்கதவடைப்ப
விறையவனிதற்குக் காரணமேதென
மறிகடற்றுயிலு மாயவனுசைப்பான்
பிறைமருப்பொன் றுடைப் பிள்ளையென் றனக்குத்
தந்தருள்புரிந்த தவப்பயனீதெனச்
சிந்தைமகிழ்ந்து தேவர்தேவனும்
பூங்கொடியடைத்த பொற்றாழ்நீங்கச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரங்கமுன் னுரைத்த சக்கிரபாணி
யிக்கதைசொல்ல வக்கணிசடையனு
மிக்கநல்விரதம் விருப்புடனோற்றயின்
மாதுமையடைத்த வன்றாழ்நீக்கி
நாதனைநணுகிட நம்பனுநகைத்தான்
நானோவந்த நகையான துவெனத்
தேனேர்மொழியா டெளியக்கூறெென
நன்மதிநுதலாய் நானிலந்தன்னி
லுன்மகனோன்பி னுறுதியறிந்து
சிந்தைமகிழ்ந்து சிரித்தேன்யானென
வந்தமிலரனை யாயிழைவணங்கிப்
பொருஞ்சூரறவேல் போக்கியகுமரன்
வரும்படியானும் வருந்திநோற்பேனென
விறையவன்கதைசொல வேந்திழைநோற்றபின்
குறமடமகளைக் குலமணம்புணர்ந்தோன்
சுடர்வடிவேலோன் றொல்வினைதீர்ந்து
தாதுமைவண்டுழுந் தாமத்தாமனை
மாதுமையாளை வந்துகண்டனனே
கண்ணநீகண்ணிலாக் கட்செவியாகெனத்
தண்ணறுங்குழலுமை சாபமிட்டதுவு
மக்குநீறணியு மரன்முதலளித்த
விக்கினவிநாயகன் விரதநோற்றதன்பின்
சுடர்க்கதையேந்துக் துளவமாலையன்
விடப்பணியுருவம் விட்டுநீங்கியதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுரிகொள்கூத்துடைப் பரமனுநோற்றுக்
கவுரியன்றடைத்த கபாடந்திறந்ததும்
வாசமென்சூழலுடை மாதுமை நோற்பத்
தேசம்போகிய செவ்வேள்வந்ததும்
வானவர்நோற்று வரங்கள் பெற்றதும்
நாரதமுனிவ னவின்றிடக்கேட்டே
யிந்நிலந்தன்னி லிவ்விரதத்தை
மன்னவன்வச்சி ரமாலிமுன்னோற்றுக
காயத்தெழுந்த கடும்பிணிதீர்த்து
மாயிரும்புவியின் மன்னனாய்வாழ்ந்து
தடமுலைத்திலோத்தமை தனைமணம்புணர்ந்து
மழவிடைபோற்பல மைந்தரைப்பெற்றுக்
கடைமுறைவெள்ளியங் கயிலையிலுற்றான்
பரிவொடிவ்விரதம் பாரகந்தன்னில்
விரைகமழ்நறுந்தார் விக்கிரமாதித்தன்
மறிகடற்புவிபெற வருந்திநோற்றிடுநாண்
மற்றவன் காதன் மடவரலொருத்தி
யிற்றிடுமிடையாளிலக்கணசுந்தரி
மெத்தவன்புடனிவ் விரதநோற்பேனென
வத்தந்தன்னி லணியிழைசெறித்துச்
சித்தமகிழ்ந்து சிலநாணோற்றபி
னுற்றநோன்பி னுருதிமறந்து
கட்டியவிழையைக் காரிகையவிழ்த்து
வற்றியகொவ்வையின் மாடேபோட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கதுதழைத்தே யலருந்தளிருமாய்ப்
பாங்குறவோங்கிப் படர்வதுகண்டு
வேப்பஞ்சேரியிற் போய்ச்சிறையிருந்த
பூப்பயில்குழல்சேர் பொற்றொடியொருத்தி
யவ்வியமில்லா ளவ்விடந்தன்னிற்
கொவ்வையடகு கொய்வாள்குறுகி
யிழைய துகிடப்பக் கண்டவளெடுத்துக்
குழைதவழ்வரிவிழிக் கோதைகைக்கட்டி
யப்பமொடடைக்கா யவைபலயவைத்துச்
செப்பமுடனே திருந்திழைநோற்றிடக்
கரிமுகத்தண்ணல் கருணைகூர்ந்து
பண்டையிலிரட்டி பதமவட்கருளக்
கொண்டுபோயரசனுங் கோயிலுள்வைத்தான்
விக்கிரமாதித்தன் விழிதுயில்கொள்ள
வுக்கிரமான வுடைமணிகட்டித்
தண்டையுஞ்சிலம்புந் தாளினின்றொலிப்பக்
கொண்டல்போல்வருங் குஞ்சரமுகத்தோன்
மனமிகக்கலங்கு மன்னன்றன்னிடங்
கனவினில்வந்து காரணமாக
விலக்கணசுந்தரி யிம்மனையிருக்கிற்
கலக்கம்வந்திடுங் கழித்திடுபுறத்தெனத்
துண்ணெனவெழுந்து துணைவியைநோக்கிக்
கண்ணுறக்கண்ட கனவின்காரண
மண்ணலுரை த்திடு மவ்வழிதன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லானைகுதிரை யவைபலமடிவுற
மாநகர்கேடுறும் வகையதுகண்டே
யிமைப்பொழுதிவளிங் கிருக்கலாகாதென
வயற்கடையவனு மகற்றியபின்னர்
வணிகன்றனது மனைபுகுந்திருப்ப
மணியுமுத்தும் வலியகல்லாய்விட
வணியிழைதன்னை யவனுமகற்ற
வுழவர் தம்மனையி லுற்றவளிருப்ப
வளர்பயிரழிந்து வளம்பலகுன்ற
வயன் மனையவரு மகற்றியபின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடிசெல்லக்
குயக்கலமுடைந்து கொள்ளைபோக
வயற்கடையவனு மகற்றியபின்னர்த்
தூசுதூய்தாக்குந் தொழிலோர்மனைபுகத்
துரசுகளெல்லாந் துணிந்துவேறாகத்
துசருமவளைத் தூரஞ்செய்ய
மாலைக்காரன் வளமாலைபுகலு
மாலையாம்பாம் வகையதுகண்டு
ஞாலமெல்லா நடுங்கவந்துதித்தாய்
சாலவும்பாவிநீ தான்யாரென்ன
மெம்மனமிகவு மேவிமுனிவுறா
வம்மனையவனு மகற்றியபின்ன
ரவ்வைதன்மனை யவள்புகுந்திருப்ப
வவ்வைசெல்ல வகங்கடோறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதனரெறிந்தனர் மறியத்தள்ளினர்
கைகொடுகுற்றினர் கண்டோர்பழித்தன
ரவ்வைமீண்டுதன் னகமதிற்சென்றே
யிவ்வகைக்கன்னிநீ யாரெனவினாவக்
காத்தாண்டுலகு கருணையோடாண்ட
மார்த்தாண்டராசன் மகள் நானொருத்தி
யெல்லார்க்குமூத்தா ளிலக்கணசுந்தரி
சொல்லுவிக்கிரம சூரியன் மனையெனச்
சீர்கெடவிருந்த தெரிவையை நோக்கி
நீரதுகொண்டு நிலமெழுகிடுகெனச்
சாணியெடுக்கத் தையலுஞ்சென்றாள்
சாணியுமுழுத்துத் தண்ணீர்வற்றிப்
பேணியபுழுவாய்ப் பெரிதுதோன்ற
மானேர்விழியாள் வருந்துதல்கண்டு
தானேசென்று சாணியெடுத்துத்
தண்ணீர்கொண்டு தரைமெழுக்கிட்டு
மண்ணியவீட்டின் மணிவிளக்கேற்றிப்
புத்தகமெடுத்து வாவெனப்புகலப்
புத்தகம்பாம்பாய்ப் பொருந்திநின்றாட
மெத்தவுண்ணடுங்கி வீழ்ந்தவள்கிடப்பக்
கொவ்வையங்கனிவாய்க் கோதையைவிலக்கி
யவ்வைதானே யகமதிற்சென்றி
புத்தகமெடுத்துப் பொருந்தப்பார்த்து
வித்தகநம்பி விநாயகமூர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகப்பிள்ளைசெய் காரியமிதுவென
வுத்தமியவ்வை யுணர்ந்துமுன்னறிந்து
தவநெறிபிழைத்த தையலைநோக்கி
நுவலரும்விநாயக னோன்புநோற்றிடுகெனக்
கரத்துமூவேழிழைக் காப்புக்கட்டி
யப்பமுமவலு மாம்பலபண்டமுஞ்
செப்பமதாகத் திருமுன்வைத்தே
யவ்வைகதைசொல வாயிழைகேட்டு
மத்தகக்களிற்றின் மகாவிரத்தை
வித்தமாக விளங்கிழைநோற்றுங்
கற்பகநம்பி கருணைபெற்றதற்பின்
சக்கிரவாள சைனியந்தோடு
விக்கிரமாதித்தன் வேட்டையிற்சென்று
தானுஞ்சேனையுந் தண்ணீர்விரும்பி
யெவ்வகைசெய்வோ மெனவுளமெலிந்தே
யவ்வைதன்மனை யங்கவரணுக
வெய்துந்தாகமு மிளைப்புங்கண்டு
செவ்வேயவற்றைத்தீர்க்கவெண்ணி
யிலக்கணசுந்தரி யென்பவடன்னை
யப்பமுநீரு மரசற்கருளெனச்
செப்பியவன்னை திருமொழிப்படியே
யுண்ணீர்க்கரகமு மொருபணிகாரமும்
பண்ணேர்மொழியான் பார்த்திபற்குதவ
வொப்பறுவபடையு முயர்படைவேந்தனு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மப்பசிதீர வருந்தியபின்ன
ரானைகுதிரை யவைகளுமுண்டுந்
தானது தொலையாத் தன்மையைக்கண்டே
யிவ்வகை சமைத்தநீ யாரெனவினவ
மவ்வலங்குழலாள் மௌனமாய்நிற்ப
வவ்வைதரன்சென்றங் கரசர்க்குரைப்பாள்
கணபதிநோன்பின் காரணங்காணிது
குணமுடையிவளுன் குலமளையாட்டி
யிலக்கணசுந்தரி யென்றவைகூற
மங்கையைநோக்கி மனமிகமகிழ்ந்து
திங்கணேர்வெள்ளிச் சிவிகையினேற்றிக்
கொண்டூர்புகுந்தான் கொற்றவேந்தனு
மொண்டொடியாரி லுயர்பதமுதவினன்
சிந்துரநுதலார் சென்றடிபணியச்
சுந்தரியிருந்தாள் சுகத்துடன்மகிழ்ந்தே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கணேசாய நமஹ

# திருவெம்பாவை

## திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்
தடங்கண்மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்விம்மி மெய்ம்மறந்துபோதார்
அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னயென்னேஈதே எந்தோழி
பரிசேலோர் ரெம்பாவாய். 01.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
பூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஆசனார்க் கன்பர்யாம் ஆடலோ ரெம்பாவாய். 02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரேழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்னென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர ஈசன் பழஅடியீர பாங்குடையீர
புத்தடியோம் புன்மைதீரத் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோரும் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.
03.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொண்டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.
04.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.
06.

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்உன்னற்
கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லாமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் போதையர்போல் வாளா
கிடத்தியால்என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.
- 07.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கெட்டிலையே
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ - ரெம்பாவாய். 08.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமெலோ - ரெம்பாவாய்
09.

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியு மெல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ - ரெம்பாவாய். 10.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையார் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழந்தோங்கா ணாரழல்போற்
செய்யவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா ஐயாநீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்கொண் டருளும் விளையாட்டின்
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந் தொழிந்தோம்
மெய்யாமற்காப்பா யெமையேலோ - ரெம்பாவாய். 11.

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தன்ற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பவரஞ் செய்ய அணிகுழன்மேல்
வண்டார்ப்பப் பூத்திகழும் பொய்கை குடைந்
துடையான் பொற்பாதம் மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ
- ரெம்பாவாய். 12.

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அலங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடைந்து புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
13.

காதார் குழையாடப் பைம்பூண் கனலாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ - ரெம்பாவாய். 14.

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தணையாள் விண்ணோரைத்
தான்பணியாள் பேரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏகுருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ - ரெம்பாவாய்.15.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்ளென்னத்
திகழ்தெம்மை யாளுடையாள் ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யன்னப் பொழியாய் மழையேலோ - ரெம்பாவாய்.
16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங் ணவன்பாற் றிசைமுகன்பாற் தேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லாங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்கண் ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடலோ - ரெம்பாவாய்.
17.

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகித்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோ
- ரெம்பாவாய்.18.

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
லெங்கொங்கை நின்னப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ
- ரெம்பாவாய்.19.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநி னத்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் மீறாம் மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ - ரெம்பாவாய்.
20.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்னை இயற்கை யெய்திய போது விரைந்து வந்து ஆறுதல் கூறி பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேர்த்தியாக நிறைவேற்றுவதற்கு உதவி புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித் தவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரம், பதாதைகள் வெளியிட்டோருக்கும், அத்துடன் இன்று நடைபெறும் 31ம் நாள் கிரிகைகளில் கலந்து கொண்டோருக்கும் இக் கிரியைகளை சிறப்பாக நடாத்தி தந்த அந்தணர்களுக்கும், இன் நினைவேட்டினை உரிய வேளையில் அச்சேற்றி தந்த சக்தி பதிப்பகத்தினருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.


**- நன்றி -**



குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும்தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறருக்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.

**"நன்நெறியே இறைவணக்கம்"**

-சுவாமி விவேகானந்தர்-

சக்தி பதிப்பகம் மீசாலை - 0773160464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org